# C.S.I. KANYAKUMARI DIOCESE

# DEPARTMENT OF V.B.S. MINISTRIES

# V.B.S. 2024

நோக்கம்

## கிறிஸ்துவின் நறுமணம்

2 கொரிந்தியர் 2:15

## Aroma of Christ

இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளேயும்,
நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம். 2 கொரிந்தியர் 2:15

## பாடல்கள்



# V.B.S. 2024

## நோக்கம் : கிறிஸ்துவின் நறுமணம்

### நோக்கப்பாடல்




**பாடல் 1**

சின்ன சின்ன சிட்டுக்களே
சிங்கார மொட்டுக்களே
வாசம் வீசுவோம் வாசம் வீசுவோம்
கிறிஸ்துவின் நறுமணமாய் வாசம் வீசுவோம்

இயேசுவை அறிந்து நல்ல வாசம் வீசுவோம்
இறைவேண்டல் செய்துமே வாசம் வீசுவோம்
பக்தியுடன் அன்பு செய்து வாசம் வீசுவோம்
பகிர்ந்து பகிர்ந்து ஒன்றிணைந்து வாசம் வீசுவோம்
நல்ல ஆலோசனையில் வாசம் வீசுவோம்
நிலைவாழ்வின் நம்பிக்கையில் வாசம் வீசுவோம்

## நாள் 1 : கிறிஸ்துவை அறிந்து நறுமணம் வீசு

பாடல் 2



சாரோனின் ரோஜாவாய்

பள்ளத்தாக்கின் லீலியாய்

உள்ளத்தில் இயேசுவையே

அறிந்து வாசம் வீசுவோம்

கிறிஸ்துவுக்குள் எப்போதும்

வெற்றிப்பெற செய்வதால்

கிறிஸ்துவின் வாசனையாய்

நேசத்தோடே வாழுவோம்

## நாள் 2 : இறைவேண்டலில் நறுமணம் வீசு

### பாடல் 3



ஆலயம் சென்றார் அன்னாள்
தன்குறை சொல்லி அழுதார்
பொருத்தனை செய்து ஜெபித்தார்
துக்கத்தைத் துடைத்துக்கொண்டார்

ஆண்டவர் ஆசீர்வதித்தார்
சாமுவேல் வந்து பிறந்தார்
ஆலயத்தில் அர்ப்பணித்தார்
நறுமணம் பரவச் செய்தார்

## நாள் 3 : இறை பயத்துடன் நறுமணம் வீசு

பாடல் 4

ஒண்ணா இருக்கணும் தம்பிகளே – நம்ம
இயேசு சொன்னதை கேளுங்களே
கர்த்தருக்கு பயப்பட வேணுமுங்கோ – அது
ஞானத்தின் துவக்கமுங்கோ
தாவீதின் இறைபயம் இருந்தாலே – பெரும்
கோலியாத்தும் தோற்றுப் போவான்

தானே தந்தன தந்தானே... (4) – போடு
தானே தந்தன தந்தானே... (4)

கர்த்தருக்கு பயப்படும் பயமிருந்தா – அது
சுகந்த நறுமணமாம்
சாலொமோன் போலவே ஜெபித்தாலே
முழு இறை ஞானம் கிடைக்குமுங்கோ – ஓகோ
ஒண்ணா இருக்கணும்...

தானே தந்தன தந்தானே – போடு
தானே தந்தன தந்தானே – (4)



## நாள் 4 : அன்பு செய்து நறுமணம் வீசு



### பாடல் 5

அன்புமலர் சிரிக்குதம்மா
நறுமணம் தான் வீசுதம்மா
தேனைக் கொடுத்து உதவுதம்மா
தென்றல் வீச ஆடுதம்மா

அன்புமலராய்ச் சிரித்திடுவாய்
அன்பாய் மணம் வீசிடுவாய்
தேனைப்போல இனித்திடுவாய்
தினமும் அன்பு கூர்ந்திடுவாய்

இயேசு தன்னை காணிக்கையாக்கி
நம்மேல் கனிந்து அன்பு செய்தார்
பேணி நாமும் அதுபோல
பிறரில் அன்பு கூர்ந்திடுவோம்

## நாள் 5 : பகிர்ந்து நறுமணம் வீசு

பாடல் 6



காக்கா கூட்டத்தை பாருங்க
கரைஞ்சு உண்ணுது அதுவுங்க
தனக்குக் கிடைச்ச உணவைத்தான்
பகிர்ந்து உண்ணுது அழகுங்க

தம்பி தங்காய் உனக்குத்தான்
பகிரும் குணம் வேணுமுங்க
ஏழை எளிய மக்களுக்கு
நல்லா உதவி செய்யணுங்க

இயேசு சொல்லும் வசனத்த
கேட்டு வாழ பழகணும்
இயேசுவின் செல்ல பிள்ளைகளே
அதுதான் நமக்கு நறுமணம்

## நாள் 6 : நல் ஆலோசனையால் நறுமணம் வீசு

### பாடல் 7

குறும்புக்கார மான்குட்டி
துள்ளி குதித்து ஓடுது பார்
அம்மா அப்பா சொல் கேளாமல்
காட்டுக்குள்ளே போகுது பார்

ஐயோ அங்கே கலங்குது
வழிதெரியாமல் அலையுது
இடி மின்னல்கள் வந்தது
இருட்டில் சிக்கி தவித்தது



புதருக்குள்ளே விழுந்தது
விம்மி விம்மி அழுதது
சிங்கம் சத்தம் கேட்டது
பதுங்கி பதுங்கி வந்தது
கடித்துத் தூக்கிச் சென்றது
வயிறுபுடைக்கத் தின்றது

இயேசுவின் செல்லக் கண்மணியே
இனிய நல்ல யோசனையால்
துன்பம் நீங்கி இன்பமே
ஆனந்தமாக வாழ்வாயே

# நாள் 7 : நிலை வாழ்வின் நறுமணம் வீசு

## பாடல் 8

அன்பு தம்பி தங்கையரே

நறுமணம் வீசிட வாருங்களே (2)

மாயையான இவ்வுலகில்

பாவ வலையில் சிக்கிடாமல்

மன்னர் இயேசு வழிநடந்து

சான்றாய் நறுமணம் வீசுங்களே (2)

நிலைவாழ்வின் நறுமணம் வீசுங்களே



## பொதுவான பாடல்கள்

**பாடல் 9**

ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்

ஆனந்தமான கொண்டாட்டம்

கானாவூரு கலியாண வீட்டிலே

ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்

சுவையான இரசமெல்லாம் தீர்ந்ததாலே

வீட்டாருக்குத் திண்டாட்டம்

ஐயோ வந்த விருந்தினரெல்லாம்

அங்கும் இங்கும் திண்டாட்டம்

இயேசு அங்கே வந்ததாலே

எல்லாருக்கும் கொண்டாட்டம்

தண்ணீரை இரசமாக்கித் தந்ததாலே

ஆனந்தம் பேரானந்தம்



பாடல் 10

மேய்ப்பன் சத்தம் கேட்கும் ஆட்டுகுட்டிபோல்

இயேசு சத்தம் கேட்கும் அவரின் பிள்ளை நான்

உண்ண உணவு தருவார், தோளில் சுமந்து செல்வார்

காயங்கள் யாவும் கட்டிடுவார், தூக்கியணைத்துக் கொள்வார்

இயேசு சத்தம் கேட்டு அவரை நோக்கிப்பார்

துள்ளி குதித்து மகிழ்ந்து ஓடி அவர் பாதம் சேர்



## பாடல் 11

கும்மியடிப்போம் தம்பிகளே
ஆடிப்பாடி கும்மியடிப்போம்
கும்மியடிப்போம் தங்கையரே
நடனமாடி கும்மியடிப்போம்

இயேசுவின் தோட்டத்து மலர்கள் நாமென்று
பாடல் பாடியே கும்மியடிப்போம்
இயேசு நம்மை நேசிப்பதாலே
மகிழ்ந்து ஆடி கும்மியடிப்போம்

மகிழ்ந்து குதித்து தாளங்கள் தட்டி
சாட்சியாய் வாழ கும்மியடிப்போம்
இயேசுவின் சொந்தங்கள் நாமே என்று
ஆர்ப்பரித்தே கும்மியடிப்போம் – கும்மியடிப்போம்



பாடல் 12

We are the aroma, aroma, aroma of Christ

We were saved and redeemed by Christ

By His calvary love and the blood He shed

We are pleasing aroma to God

இயேசுவின் நற்கந்தம், நற்கந்தம், நற்கந்தம் நாமே

நாம் விடுதலை பெற்றுக்கொண்டோம்

அவர் கல்வாரி அன்பாலும் இரத்தத்தாலும்

நாம் சுகந்த வாசனையானோம்



பாடல் 13

ஓ…ஹைய்யா ஓ…ஹைய்யா ஓ…ஹைய்யா

ஏலேலோ பாடிக்கிட்டு

ஐலசா சொல்லிக்கிட்டு

அலையைத் தாண்டி

முன்னே போகிறோம் – இயேசுவோடே

சீறிவரும் புயலுமுண்டு கடலிலே

புரண்டுவரும் அலையுமுண்டு கடலிலே

கர்த்தர் இயேசு எங்கக்கூட இருப்பதனாலே (2)

ஏலேலோ ஐலசா முன்னே போகிறோம்

இயேசுவோடே ஐலசா சொல்லிப் போகிறோம் – ஏலேலோ

துன்பமெல்லாம் நிறஞ்சிருக்கும் வாழ்விலே


சோதனைகள் பலவுமுண்டு உலகிலே

நங்கூரமா இயேசு சுவாமி இருப்பதனாலே (2)

அல்லேலூயா பாடிக்கொண்டே முன்னே போகிறோம்

இயேசுவோட பாடிக்கொண்டே முன்னே போகிறோம்

– ஏலேலோ பாடிக்கிட்டு



## பாடல் 14

இயேசுவின் தோட்டத்தில் நறுமணம் வீசிட
வாருங்கள் பிள்ளைகளே – அந்த
திருச்சபை தோட்டத்தில் அரும்புகளாய் நின்று
வளருங்கள் பிள்ளைகளே

கரும்பினை சுவைக்கும் வண்டுகள்போல
திருமறையைக் கற்று தேர்ந்திடுங்கள்
விரும்பியே மறையின் வழியில் நடந்து
வாழ்ந்திடுங்கள் சான்று பகர்ந்திடுங்கள்



## பாடல் 15

பிள்ளைகளே அருமை செல்வங்களே
மணம் வீசும் மலராக மலருங்கள்
குணம் நிறைந்த குழந்தைகளாய்
வளர்ந்து வாழுங்கள்

பெற்றோருக்கு கீழ்ப்படியும் பிள்ளைகளாய்
பெரியோரை மதிக்கும் மழலைகளாய்
திருமறையைப் படித்து
இடைவிடாமல் ஜெபித்து
இறைஇயேசு அரவணைப்பில்
வளர்ந்து வாழுங்கள்



# தியானப் பாடல்கள்

## பாடல் 16

எப்பத்தா என்று சொல்லியே
என்னைத் தொடும் என் இயேசுவே

கேள்வி ஞானம் இல்லாத பேதை நான் ஐயா
உம் சத்தம் கேட்கின்ற வரம் தாருமே
கட்டுகள் விலகட்டும் குறைகள் மறையட்டும்
கட்டிய ஆவிகளெல்லாம் சாம்பலாகட்டும் – எப்பத்தா

மந்தநாவும் திக்குவாயும் உள்ளவன் ஐயா
நீர் தொட்டு உதட்டைத் தொட்டு பாடச் செய்யுமே
திக்கற்ற மக்களுக்கு சகாயம் செய்திடும்
எக்குறையும் இல்லாமல் எனைக் காத்திடும் – எப்பத்தா

ஒளியற்ற கண்களுக்கு ஒளி நீர் ஐயா
உணர்வில்லா என்உள்ளத்திற்கு உயிர் தாருமே
மங்கியத்திரி என்னை துலங்கச் செய்திடுமே
உம்மருள் எங்கும் என்றும் ஒளி வீசுவேன் – எப்பத்தா



## பாடல் 17

எனை உம்மிடம் தருகிறேன் என் இயேசுவே

உம் அன்பால் நிரப்பிடுமே

உம்மார்பில் சாய்ந்து நான் அழவேண்டும்

என் கண்ணீரை உம்மிடம் தரவேண்டும்

உடைந்த என் உள்ளம் தேற்றிடுமே

வழிதெரியா ஆட்டைப் போல் அலைகின்றேனே –எனை

கடல்நீரில் மீனழுதால் யாரறிவார்

மழைநீரில் நானழுதால் யார் காண்பார்

என்னுள்ளம் உடைத்து உம்மிடமே

தருகின்றேன் என்னை உம் சொந்தமதாய்

என் நம்பிக்கை நங்கூரம் நீர்தானையா

உம் மார்போடு சேர்த்தென்னை காப்பவரே

தாய்ப்போல் என்றும் அணைப்பவரே

ஆறுதல் எனக்கென்றும் நீரே ஐயா




## பாடல் 18

உருவாக்குமே என்னை உருவாக்குமே
உருமாற்றுமே என்னை உருமாற்றுமே
உம்சித்தம் செய்ய உம்மைப் பின்தொடர
உம்மைப்போல் உருமாற்றுமே

பெரும் பாவியாகவே அலைந்தேனே
பாவத்தின் ஆழியில் சிக்கினேனே
எனக்காக பரத்தினை துறந்துவந்த
பரமனே என்னை உருமாற்றுமே

இவ்வுலகின் பின்னே ஓடிப்போனேனே
உலகத்தின் இச்சையில் மூழ்கிப்போனேன்
எனக்காக சிலுவையை ஏற்றுக்கொண்ட
இணையில்லா அன்பினால் உருமாற்றுமே

மனம்திருந்திய என்னை நீர் ஏற்றுக்கொள்ளும்
பரமனே உம்மிடம் சரணடைந்தேன்
சிந்திய உம்திரு இரத்தத்தாலே
கழுவியே என்னை நீர் உருமாற்றுமே



## பாடல் 19

உம் நல்ல கிருபைகளால்

எனக்கிரங்கும் என் இயேசுவே

உம்மை மறந்து தூரமாய் போனேன்

நிம்மதி இழந்து அலைந்தேனே

என் கண்ணீரே எனக்கு உணவாகி

என் படுக்கையை கண்ணீரால் நனைக்கின்றேனே – உம் நல்ல

பாவமாம் பொல்லா கோட்டைக்குள் அடிமையானேன்

விடுவிப்பார் இல்லாமலே ஏங்குகின்றேன்

வலைக்குள் சிக்கித் தவிக்கும் மீன் போல

பொல்லா வலையில் சிக்குண்டு தவிக்கிறேனே – உம் நல்ல

யோனாப்போலவே வழிமாறி நான் சென்றேன்

தோல்விகள் என்னையே தொடர்ந்தனவே

ஐயா இரங்கும் உந்தன் கிருபையாலே

ஏற்றுக்கொள்ளும் என்னை உம் சொந்தமாய் – உம் நல்ல



## பாடல் 20

ஆளவந்த என் இயேசுவே – உம்
சிலுவையின் நிழலில் காத்துக்கொண்டீரே

பாவத்தின் பிடியில் சிக்கி நான் தவித்தேன்
பாதகன் என்னை விடுவிக்க ஜெபித்தேன்
என் வேண்டல் கேட்டு என்னை மீட்டுக்கொண்ட
என் மீட்பர் பாதம் என்னை அர்ப்பணித்தேன்

இருண்ட என் வாழ்வில் ஒளியாக வந்தார்
வறண்ட என் வாழ்வுக்கு வளமதை தந்தார்
துன்பம் மறைந்தது இன்பம் நிறைந்தது
என் நேசர் இயேசுவில் என்னை அர்ப்பணித்தேன்

நம்பிக்கையுடனே வாழ்ந்து என்றும் மகிழ்ந்திட
நல்வாழ்வுக்காக இறைவனை புகழ
சிலுவையின் இரத்தம் கழுவிடும் நித்தம்
என் ஆண்டவர் சமூகம் என்னை அர்ப்பணித்தேன்



## பாடல் 21

உந்தன் பாதமே தந்தேன் எந்தன் இயேசுவே
ஏற்று கொள்ளுமே என்னை தாங்கி காருமே

பந்த பாசங்கள் வந்து என்னைத் தாக்குதே
சொந்த பாவங்கள் எல்லாம் சூழ்ந்து நிற்குதே
முந்து மானிடம் செய்த பிழைகள் அனைத்துமே
உந்தன் பாதமே தந்து அர்ப்பணிக்கின்றேன்

துன்பப்படும் மாந்தரின் துன்பம் மாற்றிட
எண்ணம் இல்லா மாந்தனாய் வாழ்ந்து கழித்தேனே
துட்டத்தனம் நீக்கியே ஏற்றுக் கொள்ளுமே
வாசம் வீசும் வாழ்வினை தாரும் நாதனே

கற்ற பெருமை உள்ளினில் திமிராய் போனதே
மற்றவரை ஏற்றிட உள்ளம் மறுக்குதே
உற்ற உறவாய் வாழ்வினில் அன்பை பகிர்ந்திட
உந்தன் ஆவியை என்னில் நிறைவாய் நிரப்புமே



# *"Aroma of Christ"*

***"For we are the aroma of Christ to God among those who are being saved and among those who are perishing"***
***(2 Corinthians 2:15)***

| *Singers* |
|---|

**Rev. A. Veslin Christopher**
**Rev. N. Vibin John**
**Rev. J.S. Jaisingh**
**Rev. T. Sajin Livingston**
**Mr. N.P. Alex**
**Mr. R. Justin Raj**
**Mrs.D. Irin Hebsiba**
**Mrs. Abida Justus**
**Mrs. Abisha Justus**
**Mrs. Abima Justus**
**Dr. J. Breesha**
**Miss. J. Greetlin Jesmi**
**Miss. J. Sherina Glory**
**Baby J. Giftlin Joana**





## Songs Contributors

Rev. A. Jeba Suji

Rev. S. Jayalal

Rev. P. Jacob Peter

Mr. D. Paul Dhas

Mr. A. Ebenezer

Eva. P.M. Rajayan

Dr. J. Anusha Regi

Mrs. Annee Florence Sheeba

## Songs in charge & Music

Rev. A. Veslin Christopher

## Music Orchestratioin

Rev. D. Onacimus Sahayam


**Rt. Rev. Dr. A.R. Chelliah,** Bishop

**Rev. S. Godfrey Samuel,** Director - 9443681976

**Rev. S. Jayalal,** Asst. Director - 9443558798


**DEPARTMENT OF V.B.S. MINISTRIES**

**C.S.I. KANYAKUMARI DIOCESE**


C.S.I. PRINTING PRESS
Marthandam 04651 - 271329